செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண் : 476 நாள் : 9/08/17

# வேலூர் சுகாதார மாவட்டம்

## தேசிய குடற்புழு நீக்க நாள்: 10.08.2017

வேலூர் மாவட்டத்தில் தேசிய குடற்புழு நீக்க நாள் ஆகஸ்ட் 10-ம் நாள்: 2017 வியாழக்கிழமை கடைபிடிக்கப்படுகிறது. விடுபட்ட குழந்தைகளுக்கான சிறப்பு முகாம் ஆகஸ்ட் 17-ம் தேதி வியாழன்கிழமை ஆகிய தினங்களில் அனைத்து அரசு, அரசு சார்ந்த மற்றும் தனியார் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களில் நடைபெறுகிறது. இதன் முலம் மாவட்டம் முழுவதும் 11,50,593 குழந்தைகள் பயன்பெற உள்ளனர்.

இதற்காக 1 வயது முதல் 19 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் குடற்புழு நீக்க மருந்து (அல்பெண்டசோல்) ஒரே நாளில் இலவசமாக வழங்கப்படுகிறது. இதன் முலம் குழந்தையின் ஆரோக்கியம் மேம்படுவதுடன் ஊட்ட சத்து குறைபாடு இல்லாமல் ஆரோக்கியமாக வாழ்வதற்கும், கல்வி திறன் அதிகரிக்கவும் உதவுகிறது.

இத்திட்டத்தில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை, பள்ளி கல்வித்துறை, மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் திட்டம் ஆகிய முன்று துறைகளும் இணைந்து இத்திட்டத்தில் செயலாற்றுகின்றன.

புழு தொற்றினால் ஏற்படும் பாதிப்புகளான ஊட்டசத்து குறைபாடு, சோர்வு, சுகவீனம், பசியின்மை, இரத்தசோகை, குமட்டல், வாந்தி, வயிற்றுவலி, வயிற்றுபோக்கு வைட்டமின் ஏ சத்து குறைபாடு ஆகியவற்றிலிருந்து பாதுகாக்க இந்த குடற்புழு நீக்க மருந்தினை உட்கொள்வது இன்றியமையாதது.

அங்கன்வாடி மையங்களில் பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத 1 முதல் 5 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் பள்ளி செல்லாத 1 முதல் 19 வயது வரை அனைத்து குழந்தைகளுக்கும் அல்பெண்டசோல் மருந்து அங்கன்வாடி மையத்தில் வழங்கப்படும். 1 முதல் 12-ம் வகுப்பு வரை பள்ளியிலேயே மதிய உணவிற்கு பின்னர் மாத்திரை வழங்கப்படும்.

வேலூர் சுகாதார மாவட்டத்தில் 1,449 அங்கன்வாடி மையங்கள், 1,288 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், 446 தனியார் பள்ளிகள், 58 அரசு மற்றும் தனியார் கல்லூரிகளிலும் திருப்பத்தூர் சுகாதார மாவட்டத்தில் 1542 அங்கன்வாடி மையங்கள், 1,245 அரசு பள்ளிகள், 334 தனியார் பள்ளிகளும் 31 அரசு மற்றும் தனியார் கல்லுரிகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் முலம் வேலூர் சுகாதார மாவட்டத்தில் சுமார் 608859 குழந்தைகளும், திருப்பத்தூர் சுகாதார மாவட்டத்தில் 541734 குழந்தைகளும் பயனடைகின்றனர். மேலும் இந்த முகாமிற்கு தேவையான மாத்திரைகள் மற்றும் தகவல் கல்வி ஒளிபரப்பு சாதனங்கள் வழங்கப்பட்டு தயார் நிலையில் உள்ளது.

அல்பெண்டசோல் மருந்து முலம் குடற்புழு தொற்றிலிருந்து விடுபட்டு சுகாதாரமான எதிர்காலம் பெற்றிட அனைவரும் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

செ.ம.தொ.அ.
[illegible]-9.